Q.C. 107

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| Name of the Test: | Animal Husbandry Department Test (With Books) | 162 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.
2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.
3. In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.
4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.
5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

1. How many days of special Causual Leave can be granted for a government servant to undergo antirabies treatment?
ஒரு அரசு ஊழியர் வெறிநோய் தடுப்பு சிகிச்சைக்காக எத்தனை நாட்கள் சிறப்பு தற்செயல் விடுப்பு எடுக்கலாம்?

(A) 15 days
15 நாட்கள்

(B) 18 days
18 நாட்கள்

(C) 21 days
21 நாட்கள்

(D) 25 days
25 நாட்கள்

2. How many years the Veterinary Assistant Surgeon can work ordinarily at one station?
ஒரு கால்நடை உதவி மருத்துவர் தான் பணிபுரியும் நிலையத்தில் எத்தனை ஆண்டுகள் சாதாரணமாக பணியாற்றலாம்?

(A) 3 years
3 ஆண்டுகள்

(B) 5 years
5 ஆண்டுகள்

(C) 7 years
7 ஆண்டுகள்

(D) 8 years
8 ஆண்டுகள்

3. In Tamilnadu, where the different Veterinary biological products (Vaccines) manufactured by the government?
கால்நடைகளுக்கான தடுப்பூசி மருந்துகள் தயாரிக்கும் அரசினர் கால்நடை தடுப்பூசி நிலையம் தமிழ்நாட்டில் எங்கு அமைந்துள்ளது?

(A) Viralimalai
விராலிமலை

(B) Ranipet
ராணிப்பேட்டை

(C) Hosur
ஓசூர்

(D) Aruppukottai
அருப்புக்கோட்டை

4. How many days intervel the Veterinary Assistant Surgeons should submit their applications for sanction of increment to the controlling officers?
ஆண்டு ஊதிய உயர்வு கோரும் கால்நடை உதவி மருத்துவர் தனது விண்ணப்பத்தை எத்தனை மாதங்களுக்கு முன்போ, பின்போ கட்டுப்பாட்டு அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம்?

(A) 1 month before
ஒரு மாதத்திற்கு முன்பாக

(B) 2 months before
இரண்டு மாதத்திற்கு முன்பாக

(C) 3 months before
மூன்று மாதத்திற்கு முன்பாக

(D) 4 months before
நான்கு மாதத்திற்கு முன்பாக

5. At what interval the member of the Subordinate Services should submit the land properly statement to the controlling Officer?
அரசு சார்நிலை பணிகளில் உள்ள அலுவலர்கள் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை தமது சொத்து விபர அறிக்கைகளை கட்டுப்பாட்டு அலுவலருக்கு சமர்பிக்க வேண்டும்?

(A) 1 year
ஒரு ஆண்டு

(B) 3 years
3 ஆண்டுகள்

(C) 4 years
4 ஆண்டுகள்

(D) 5 years
5 ஆண்டுகள்

6. How long one can avail joining time where the chart of post does not involve an actual change of office?
ஒரே அலுவலகத்திற்குள் பணிமாறுதல் செய்யப்பட்டால் எத்தனை நாட்கள் பணியிடை காலமாக அனுபவிக்கலாம்?

(A) NIL
பணியிடை காலம் இல்லை

(B) 1 day
ஒரு நாள்

(C) 2 days
இரண்டு நாட்கள்

(D) 3 days
மூன்று நாட்கள்

7. Who is responsible for Appointment for the post of Veterinary Assistant Surgeon?
கால்நடை உதவி மருத்துவர் பதவிக்கான பணி நியமனம் செய்யும் அதிகாரம் பெற்ற துறை தலைவர் யார்?

(A) Director (Animal Husbandry)
இயக்குநர் (கால்நடை பராமரிப்பு)

(B) Regional Joint Director (Animal Husbandry)
மண்டல இணை இயக்குனர் (கால்நடை பராமரிப்புத்துறை)

(C) Principal Secretary (Animal Husbandry)
முதன்மைச் செயலர் (கால்நடை பராமரிப்பு துறை)

(D) Assistant Director (Animal Husbandry)
உதவி இயக்குனர் (கால்நடை பராமரிப்பு துறை)

8. How many months before the controlling Officer should submitted the proposals for continuation of temporary post to Head Office?
தற்காலிக பணிகளுக்கான தொடர்பு ஆணை பிரேரணைகளை எத்தனை மாதங்களுக்கு முன்பு கட்டுப்பாட்டு அலுவலர் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்?

(A) 2 months
இரண்டு மாதங்கள்

(B) 3 months
மூன்று மாதங்கள்

(C) 4 months
நான்கு மாதங்கள்

(D) 5 months
ஐந்து மாதங்கள்

9. In the case of a government servant the year of birth alone is known but not the month and date. In such cases which month and date shall be treated as date of birth?
ஒரு அரசு ஊழியரின் பிறந்த ஆண்டு மட்டுமே தெரியவந்தால் எந்த தேதியை அவரது பிறந்த தேதியாக கணக்கில் கொள்ள வேண்டும்?

(A) 1st January
ஜனவரி 1

(B) 1st April
ஏப்ரல் 1

(C) 1st July
ஜூலை 1

(D) 1st October
அக்டோபர் 1

10. In the case of a government servant when both the year and the month of birth are known but not the exact date. In such cases which date shall be treated as the date of birth?
ஒரு அரசு ஊழியரின் பிறந்த ஆண்டும் பிறந்த மாதமும் மட்டுமே உள்ள நிகழ்வில் எந்த தேதியை பிறந்த தேதியாக கணக்கில் கொள்ள வேண்டும்?

(A) the 5th of the month
பிறந்த மாதத்தின் 5ம் தேதி

(B) the 16th of the month
பிறந்த மாதத்தின் 16ம் தேதி

(C) the 20th of the month
பிறந்த மாதத்தின் 20ம் தேதி

(D) the 30th of the month
பிறந்த மாதத்தின் 30ம் தேதி

11. How long the Veterinary Assistant Surgeons in charge of Government Institutions shall not be absent from their stations on private practice?
ஒரு கால்நடை நிலையத்தில் பணியில் உள்ள கால்நடை உதவி மருத்துவர் தனியாருக்கு சிகிச்சை அளிக்கும் பணிகளுக்காக எத்தனை மணி நேரத்திற்கு மிகாமல் நிலையத்தை விட்டு வெளியில் செல்லலாம்?

(A) more than 3 hours
மூன்று மணி நேரத்திற்கு மிகாமல்

(B) more than 4 hours
நான்கு மணி நேரத்திற்கு மிகாமல்

(C) more than 5 hours
ஐந்து மணி நேரத்திற்கு மிகாமல்

(D) more than 6 hours
ஆறு மணி நேரத்திற்கு மிகாமல்

12. How many days allowed for public auction sale if the owner of an animal under treatment fails to pay all hospital dues and arrange to take delivery of the animal from the date when it is declared fit for discharge?
ஒரு கால்நடை நிலையத்தில் சிகிச்சை பெற்று குணமடைந்த கால்நடையின் உரிமையாளர், சிகிச்சைக்குரிய முழு தொகையையும் செலுத்தாமலும், கால்நடையினை திரும்பப் பெற்றுக்கொள்ளாத நிலையிலும், எத்தனை தினங்களுக்குள் அக்கால்நடையினை பொது ஏல முறையில் விற்பனை செய்யலாம்?

(A) within 5 days
5 நாட்களுக்குள்

(B) within 7 days
7 நாட்களுக்குள்

(C) within 9 days
9 நாட்களுக்குள்

(D) within 10 days
10 நாட்களுக்குள்

13. Which of the following can a Veterinary Officer make free use for the treatment of their private cases which belong to Government Hospitals or Dispensaries?
கால்நடை மருத்துவ அலுவலர் தனியார் கால்நடை சிகிச்சைக்காக தனது நிலையத்திலிருந்து எந்த பொருட்களை இலவசமாக பயன்படுத்திக் கொள்ளலாம்?

(A) Dressing Materials
காயங்களுக்கான மருந்துகள்

(B) Instruments or Apparatus
கருவிகள் அல்லது உபகரணங்கள்

(C) Medicines
மருந்துப் பொருட்கள்

(D) None of the above
மேற்கூறிய எதுவும் இல்லை

14. Which of the following category is permitted to treat animals at free of cost in the Veterinary institutions?
கீழ்க்கண்டவற்றுள் எந்த வகை இனங்களுக்கு கால்நடை நிலையங்களில் மருத்துவக் கட்டணம் இன்றி, இலவச மருத்துவ சேவை அனுமதிக்கப்பட்டுள்ளது?

(A) Animals sent to a hospital by an officer of the SPCA
பிராணிகள் வதை தடுப்பு சங்கம் மூலம் அனுப்பப்படும் கால்நடைகள்

(B) Post Master's own animals
அஞ்சலக அதிகாரியின் சொந்த கால்நடை

(C) Panchayat Union Chairman's own animals
ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் சொந்த கால்நடை

(D) District Collector's own animal
மாவட்ட ஆட்சியரின் சொந்த கால்நடை

15. Which of the following category of animal omitted for slaughter for meat?
கீழ்க்கண்ட இனங்களில் எந்தவகை கால்நடை இறைச்சிக்காக வெட்டப்படுவதை தவிர்க்க வேண்டும்

(A) Cattle below 3 years of age
மூன்று வயதிற்கு குறைவான கால்நடைகள்

(B) Cattle above 4 years of age
நான்கு வயதிற்கு மேல் உள்ள கால்நடைகள்

(C) Cattle below 6 years of age
ஆறு வயதிற்கு குறைவான கால்நடைகள்

(D) Cattle above 8 years of age
எட்டு வயதிற்கு மேல் உள்ள கால்நடைகள்

16. In which age a cattle is declared old?
மாடுகளுக்கு "வயதாகிவிட்டது"என நிர்ணயம் செய்யும் வயது எது?

(A) 18 years
18 ஆண்டுகள்

(B) 15 years
15 ஆண்டுகள்

(C) 13 years
13 ஆண்டுகள்

(D) 10 years
10 ஆண்டுகள்

17. What is the reason for Bulls castrated and converted into work bullocks?
காளைகள் ஆண்மை நீக்கம் செய்யப்பட்டு எருது மாடுகளாக மாற்றம் செய்யப்படுவதன் காரணம்?

(A) Unhealthy condition
உடல் நலமில்லாதது

(B) Unsoundness for Breeding
இன விருத்திக்கு உகந்தது அல்ல

(C) Aged
வயதாகிவிட்டது

(D) Chronic disease
மூர்க்க குணம் உள்ளதால்

18. Who is the prescribed authority for destroying of animals against Tuberculosis and Johne's disease?
காசநோய் மற்றும் ஜோனிஸ் நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளை அழிப்பதற்கு ஆணை பிறப்பிக்க அதிகாரம் உள்ள அரசு அதிகாரி யார்?

(A) Director (Animal Husbandry)
இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை)

(B) Government Secretary (Animal Husbandry)
அரசு செயலர் (கால்நடை பராமரிப்புத்துறை)

(C) District Collector
மாவட்ட ஆட்சியர்

(D) Additional director (Farms)
கூடுதல் இயக்குநர் (பண்ணை)

19. How many times a stud bull is allowed to service per week in the farms and veterinary institution?
கால்நடை நிலையங்கள் மற்றும் பண்ணைகளில் பொலி காளைகளை வாரத்திற்கு எத்தனை முறை பொலிவிற்கு பயன்படுத்தலாம்?

(A) 4 Times
4 முறை

(B) 6 Times
6 முறை

(C) 7 Times
7 முறை

(D) 9 Times
9 முறை

20. At which days the Weekly Out Break Disease Report sent to higher officials?
வாராந்திர நோய்க் கிளர்ச்சி அறிக்கையினை வாரத்தின் எந்த கிழமைகளில் உயர் அதிகாரிகளுக்கு அனுப்ப வேண்டும்?

(A) Friday
வெள்ளிக்கிழமை

(B) Saturday
சனிக்கிழமை

(C) Thursday
வியாழக்கிழமை

(D) Wednesday
புதன் கிழமை

21. Who shall be responsible for maintaining a Cattle Mortality Register in the village?
கிராம அளவில் "கால்நடை இறப்பு பதிவேடு" என்ற பதிவேட்டினை பராமரிக்க வேண்டிய அலுவலர் யார்?

(A) Village Administrative Officer
கிராம நிர்வாக அலுவலர்

(B) Panchayat President
கிராம தலைவர்

(C) Revenue inspector
வருவாய் ஆய்வாளர்

(D) Thasildhar
வட்டாட்சியர்

22. What type of Specimen should be sent to Laboratory for diagnosis of Johne's disease?
ஜோன்ஸ் நோய் தாக்கப்பட்ட கால்நடையில் இருந்து எந்த வகையான மாதிரி பொருள் ஆய்வக பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும்

(A) Smears of rectal nucleous membrane
மலப்புழை சவ்வின் பூச்சு

(B) Blood smear
ரத்த பூச்சு

(C) Urine
சிறுநீர்

(D) Skin Scrapings
தோல் சுரண்டல்

23. Within how many hours a opened vial of the bacterial vaccine should be used?
ஒரு நுண்ணுயிரி தடுப்பூசி குப்பி திறக்கப்பட்ட பிறகு எவ்வளவு நேரத்திற்குள் பயன்படுத்தப்பட வேண்டும்?

(A) Within 24 hours
இருபத்திநான்கு மணி நேரத்திற்குள்

(B) Within 26 hours
இருபத்துஆறு மணி நேரத்திற்குள்

(C) Within 28 hours
இருபத்துஎட்டு மணி நேரத்திற்குள்

(D) Within 30 hours
முப்பது மணி நேரத்திற்குள்

24. How many days the course of treatment for bovine Lymphangitis vaccine?
"பசுவின் நிணநீர் சுரப்பி அழற்சி நோய்" தடுப்பூசியினை பயன்படுத்தும் அட்டவணையை வழங்குக

(A) 3 doses at an interval of 3 days
மூன்று நாட்கள் இடைவெளியில் 3 டோஸ்கள்

(B) 3 doses at an interval of 4 days
நான்கு நாட்கள் இடைவெளியில் மூன்று டோஸ்கள்

(C) 3 doses at an interval of 5 days
ஐந்து நாட்கள் இடைவெளியில் மூன்று டோஸ்கள்

(D) 3 doses at an interval of 6 days
6 நாட்கள் இடைவெளியில் மூன்று டோஸ்கள்

25. After removal from the freezing chamber of the refrigerator the Ranikhet disease vaccine (freeze dried) should be used
உறைநிலையில் உலர்ந்த இராணிக்கெட் தடுப்பூசி குளிர்சாதன பெட்டியின் உறைநிலை அறையில் இருந்து எடுக்கப்பட்ட பிறகு எத்தனை நாட்களுக்குள் பயன்படுத்தப்பட வேண்டும்?

(A) within 2 days
இரண்டு நாட்களுக்குள்

(B) within 3 days
மூன்று நாட்களுக்குள்

(C) within 4 days
4 நாட்களுக்குள்

(D) within 5 days
ஐந்து நாட்களுக்குள்

26. How many days can the small quantities of Ranikhet disease of vaccine be used when it is supplied by post?
அஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட உறைநிலையில் உலர்ந்த இராணிக்கெட் தடுப்பூசியை குறைந்த எண்ணிக்கையில் எத்தனை நாட்களுக்குள் பயன்படுத்தப்பட வேண்டும்.

(A) Within 8 days
எட்டு நாட்களுக்குள்

(B) Within 9 days
9 நாட்களுக்குள்

(C) Within 10 days
10 நாட்களுக்குள்

(D) Within 11 days
பதினொன்று நாட்களுக்குள்

27. Within how many hours the reconstituted freeze dried Ranikhet Vaccine must be use used?
உறைநிலையில் உலர்ந்த இராணிக்கெட் தடுப்பூசி கரைசலை எத்தனை மணி நேரத்திற்குள் பயன்படுத்த வேண்டும்?

(A) 2 hours
இரண்டு மணி நேரம்

(B) 3 hours
மூன்று மணி நேரம்

(C) 4 hours
நான்கு மணி நேரம்

(D) 5 hours
ஐந்து மணி நேரம்

28. The freeze dried Ranikhet disease vaccine is not safe for use on birds below age
உறைநிலையில் உலர்ந்த இராணிக்கெட் தடுப்பூசியை எத்தனை வார வயதுக்கு கீழ் உள்ள கோழிகளுக்கு பயன்படுத்துவது பாதுகாப்பு அற்றது?

(A) 6 weeks
ஆறு வாரங்கள்

(B) 8 weeks
எட்டு வாரங்கள்

(C) 9 weeks
9 வாரங்கள்

(D) 10 weeks
10 வாரங்கள்

29. Trypanosomes present in the animal is confirmed by taking specimens from
டிரிப்பனசோமா நோய் பாதிக்கப்பட்ட கால்நடைகளில் இருந்து எந்த வகை மாதிரி பொருள் சேகரித்து உறுதிப்படுத்த வேண்டும்?

(A) Peripheral blood
காதுமடல் ரத்தம்

(B) The eyes water
கண்ணீர்

(C) Urine
சிறுநீர்

(D) Dung
சாணம்

30. Under what section the municipal by – laws for the prevention of Rabies have been framed in the Madras district Municipalities Act 1970
சென்னை மாவட்ட மாநகராட்சி சட்டம் 1970–ல் எந்த பிரிவின் கீழ் வெறிநோய் தடுப்பு உப விதிகள் அமைந்துள்ளது?

(A) Under Section 306(25)
306(25)

(B) Under Section 307(27)
307(27)

(C) Under Section 308(15)
308(15)

(D) Under Section 309(20)
309(20)

31. If a dog suspected for Rabies, how many days the dog can be kept under strict observation in a veterinary institution?
வெறிநோய் பாதிப்பு உள்ளது என சந்தேகிக்கப்படும் ஒரு நாயை எத்தனை நாட்கள் கடும் கண்காணிப்பில் வைக்க வேண்டும்?

(A) 10 days
பத்து நாட்கள்

(B) 14 days
பதினான்கு நாட்கள்

(C) 21 days
இருபத்து ஒன்று நாட்கள்

(D) 28 days
இருபத்து எட்டு நாட்கள்

32. In 'Sui' poisoning the animal invariably dies usually in
"சுயி" நச்சு பாதிப்பினால் ஒரு கால்நடைக்கு எத்தனை மணி நேரத்திற்குள் உயிர் இழப்பு நேரிடலாம்?

(A) 18 to 24 hours
18 முதல் 24 மணி நேரம்

(B) 20 to 24 hours
20 முதல் 24 மணி நேரம்

(C) 22 to 26 hours
22 முதல் 26 மணி நேரம்

(D) 24 to 30 hours
24 முதல் 30 மணி நேரம்

33. What is the seed that causes 'Sui' Poisoning?
எந்த வகை விதைகளில் "சுயி" நச்சு காணப்படுகிறது

(A) Abrus Precatorious (Gundumani)
குண்டுமணி

(B) Arali
அரளி

(C) Oomathai
ஊமத்தை

(D) Neem
வேப்பம் விதை

34. How much fee charged for the prescribed authority to issue certificates of inspection oil cakes exported from the ports of the State of Madras?
சென்னை மாகாண கப்பல் துறைமுகங்களில் ஏற்றுமதி செய்யப்படும் புண்ணாக்கு வகை தீவனத்தை ஆய்வு செய்யும் அலுவலருக்கு செலுத்தப்பட வேண்டிய சான்றிதழ் கட்டணம் எவ்வளவு?

(A) Rs. 20
ரூ. 20

(B) Rs. 30
ரூ. 30

(C) Rs. 40
ரூ. 40

(D) Rs. 50
ரூ. 50

35. For doing intensive and effective propaganda, the departmental leaflets should be distributed in
தீவிரமான பயனுள்ள துறைச் செயல்பாடுகள் குறித்த துண்டுப்பிரசுர விளம்பரம் எந்த மொழியில் வழங்கப்பட வேண்டும்?

(A) Local languages
உள்ளூர் மொழிகளில்

(B) English
ஆங்கிலம்

(C) Hindi
இந்தி

(D) Urdu
உருது

36. What is the age eligible for candidates joining admission to the Stockman course in the Veterinary Colleges?
கால்நடை காவலாளர் படிப்பிற்கு கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் சேர தகுதியான வயது எது?

(A) Completed the age of 17 years on the 15th day of July
15 ஜூலை அன்று 17 வயது நிரம்பியவர்

(B) Completed the age of 18 years on the 15th day of July
15 ஜூலை அன்று 18 வயது நிரம்பியவர்

(C) Completed the age of 19 years on the 15th day of July
15 ஜூலை அன்று 19 வயது நிரம்பியவர்

(D) Completed the age of 20 years on the 15th day of July
15 ஜூலை அன்று 20 வயது நிரம்பியவர்

37. Who is the authorised person to give a certificate of Training of SPCA inspectors in Veterinary Institutions?
பிராணிகள் வதை தடுப்பு சங்க ஆய்வாளர்களுக்கு சான்றிதழ் வழங்க வேண்டிய அலுவலர் யார்?

(A) Principal Veterinary College Madras or District Veterinary Officer
கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் அல்லது மாவட்ட கால்நடை துறை அலுவலர்

(B) Deputy Director (Animal Husbandry)
கால்நடை பராமரிப்புத் துறை துணை இயக்குனர்

(C) Assistant Director (Animal Husbandry)
கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர்

(D) Veterinary Assistant
கால்நடை உதவி மருத்துவர்

38. After receipt of the demi official letter (D.O letter) replies to be sent within
நேர்முக கடிதங்களுக்கான பதில்கள் எத்தனை நாட்களுக்குள் அனுப்பப்பட வேண்டும்?

(A) 3 days
3 நாட்கள்

(B) 5 days
5 நாட்கள்

(C) 6 days
6 நாட்கள்

(D) 7 days
7 நாட்கள்

39. The Annual Administration Report of the department should be sent to government
ஒரு துறையின் ஆண்டு நிர்வாக அறிக்கை, அரசுக்கு எப்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்?

(A) on or before 1st April every year
அந்த ஆண்டின் 1 ஏப்ரல் அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ

(B) on or before 1st May every year
அந்த ஆண்டின் 1 மே அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ

(C) on or before 1st June every year
அந்த ஆண்டின் 1 ஜூன் அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ

(D) on or before 1st July every year
அந்த ஆண்டின் 1 ஜூலை அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ

40. How many months allotted for a contractor to supply stores to Veterinary institution under competitive tender system?
போட்டி ஒப்பந்த முறையில், ஒரு ஒப்பந்ததாரருக்கு பொருட்களை வழங்க எத்தனை மாதங்கள் அவகாசம் அளிக்க வேண்டும்?

(A) 12 months 1st April from each year
1 ஏப்ரல் முதல் 12 மாதங்கள்

(B) 10 months 1st May from each year
1 மே முதல் 10 மாதங்கள்

(C) 8 months 1st June from each year
1 ஜூன் முதல் 8 மாதங்கள்

(D) 6 months 1st July from each year
1 ஜூலை முதல் 6 மாதங்கள்

41. Verification of all stores and furnitures of stock done whenever there is a change of incumbent (or) atleast once in a following months
செலவழியும் பொருட்கள் அறையணிகள் இருப்பு சரிபார்த்தல் பணி புதிய அலுவலர் பதவியேற்ற உடனோ அல்லது பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு முறையோ மேற்கொள்ளப்பட வேண்டும்

(A) Monthly
மாதம் ஒருமுறை

(B) Bi monthly
இரு மாதத்திற்கு ஒருமுறை

(C) Quarterly
காலாண்டிற்கு ஒருமுறை

(D) Yearly
ஆண்டிற்கு ஒருமுறை

42. The indent of Stationery articles to the controller of Stationery and Printing shall ordinarily be made only once in the following months
எழுது பொருட்களுக்கான தேவை பட்டியலை எழுது பொருட்கள் மற்றும் அச்சுத் துறை கட்டுப்பாட்டாளருக்கு எந்த கால இடைவெளியில் கோரப்பட வேண்டும்

(A) Yearly
ஆண்டிற்கு ஒருமுறை

(B) Quarterly
காலாண்டிற்கு ஒருமுறை

(C) Bi monthly
மாதம் இருமுறை

(D) Monthly
மாதம் ஒருமுறை

43. The quantities of Stationery articles claimed in the indent should represent the requirements for the following period
எழுது பொருட்களுக்கான தேவை பட்டியல்களை ஒரு ஆண்டின் எந்த மாதங்களுக்காக கோரப்பட வேண்டும்

(A) from 1st January to 31st December
1 ஜனவரி முதல் 31 டிசம்பர் வரை

(B) from 1st March to February 28th
1 மார்ச் முதல் 28 பிப்ரவரி வரை

(C) from 1st April to 31st March
1 ஏப்ரல் முதல் 31 மார்ச் வரை

(D) from 1st July to June 31st
1 ஜூலை முதல் 31 ஜூன் வரை

44. Rent for private Buildings housing veterinary institution should be sanctioned by the following Officers
தனியார் கட்டிடங்களில் இயங்கும் கால்நடை நிலையங்களில் வாடகை நிதி இசைவு வழங்கும் அலுவலர் யார்?

(A) Collector
மாவட்ட ஆட்சியர்

(B) Joint director
மண்டல இணை இயக்குனர்

(C) Director
இயக்குனர்

(D) Assistant Director
உதவி இயக்குனர்

45. The cashbook should be closed and balanced in the following manner
ஒரு நிலையத்தின் பணப் பதிவு எழுதி முடிக்கப்பட்டு சரிபார்க்கபட வேண்டிய கால இடைவெளி யாது

(A) Daily
தினசரி

(B) Once in 2 days
இரண்டு நாட்களுக்கு ஒரு முறை

(C) Once in 3 days
மூன்று நாட்களுக்கு ஒரு முறை

(D) Weekly once
வாரத்திற்கு ஒரு முறை

46. The period of absence at a stretch on Causal Leave inclusive of Saturday, Sundays or other Authorised holidays should not exceed
அரசு ஊழியர் ஒருவர் தொடர்ச்சியாக (சனி, ஞாயிறு அல்லது ஏதேனும் அரசு விடுமுறை நாட்கள் உட்பட) எத்தனை நாட்களுக்கு மிகாமல் தற்செயல் விடுப்பு விண்ணப்பிக்கலாம்?

(A) 15 days
15 நாட்கள்

(B) 12 days
12 நாட்கள்

(C) 10 days
10 நாட்கள்

(D) 7 days
7 நாட்கள்

47. How many days allowed for joining a new post when the appointment of such post does not necessarily involve a change of residence from one station to another?
ஒரு பணி மாறுதலில் தற்போது வகித்த பதவியும் புதிய பதவியும் ஒரே இடத்தில் அமையுமானால் புதிய பதவியில் சேர பணியிடை காலம் எத்தனை நாட்கள் எடுத்துக் கொள்ளலாம்?

(A) not more than 1 day
ஒரு நாளைக்கு மிகாமல்

(B) not more than 2 days
இரண்டு நாட்களுக்கு மிகாமல்

(C) not more than 3 day
மூன்று நாட்களுக்கு மிகாமல்

(D) not more than 4 day
நான்கு நாட்களுக்கு மிகாமல்

48. For preparation of confidential reports personal files of all officers should be prepared by the following months
அலுவலர்களின் மந்தன அறிக்கைகள் மற்றும் தனி கோப்புகள் எந்த மாதத்தில் தயாரிக்கப்பட வேண்டும்?

(A) at the end of December
டிசம்பர் மாத முடிவில்

(B) at the end of October
அக்டோபர் மாத முடிவில்

(C) at the end of January
ஜனவரி மாத முடிவில்

(D) at the end of April
ஏப்ரல் மாத முடிவில்

49. All animals belonging to government will be valued by the DD(AH) Livestock once a year in the following months
அரசுக்கு சொந்தமான கால்நடைகளின் மதிப்பீடுகளை கால்நடை பராமரிப்புத்துறை துணை இயக்குனர்கள் ஆண்டின் எந்த மாதத்தில் மேற்கொள்ள வேண்டும்?

(A) March
மார்ச்

(B) July
ஜூலை

(C) December
டிசம்பர்

(D) January
ஜனவரி

50. How much fee should be charged for prophylactic treatment for dogs against rabies?
வளர்ப்பு நாய்களுக்கு போடப்படும் வருமுன் காக்கும் வெறிநோய் தடுப்பூசி சிகிச்சைக்கான சிகிச்சை கட்டணம் எவ்வளவு?

(A) No fees
சிகிச்சைக் கட்டணம் இல்லை

(B) Rs. 120
ரூ. 120

(C) Rs. 130
ரூ. 130

(D) Rs. 140
ரூ. 140

51. Who is in-charge of farm guest House?
அரசு பண்ணைகளில் உள்ள விருந்தினர் தங்கும் இடத்தின் பொறுப்பாளர் யார்?

(A) Farm Manager in-charge of Pasture land
மேய்ச்சல் நில பண்ணை மேலாளர்

(B) Farm Manager in-charge of Dairy
பால் உற்பத்திப் பிரிவு பண்ணை மேலாளர்

(C) Farm Manager in-charge of gardens
தோட்டப் பணி பண்ணை மேலாளர்

(D) Farm Manager in-charge of Sheep
செம்மறி ஆட்டுபிரிவு பண்ணை மேலாளர்

52. Who is responsible for Forecast and arrange in time the Field operations throughout the year such as application of Manuring, Ploughing, Harvesting, Digging, Thrashing etc.,
பண்ணை வேலைகளான உரமிடுதல், உழுதல், அறுவடை செய்தல் மற்றும் கதிரடித்தல் போன்ற பணிகளை முன்னறிவிப்பு செய்து மற்றும் உரிய நேரத்தில் செயல்படுத்தும் பணிப்பொறுப்புகள் உடைய அலுவலர் யார்?

(A) Farm Manager in-charge of gardens
தோட்ட பண்ணை மேலாளர்

(B) Farm Manager in-charge of Pasture land
மேய்ச்சல் நில பண்ணை மேலாளர்

(C) Farm Manager in-charge of Dairy
பால் உற்பத்திப் பிரிவு பண்ணை மேலாளர்

(D) Farm Manager in-charge of Bulls
காளைகள் பிரிவு பண்ணை மேலாளர்

53. Who is responsible for physical custody of all silos, Hay Stacks in farm?
பண்ணையிலுள்ள சைலோ குழிகள், வைக்கோல் போர்கள் போன்றவற்றிற்கான பாதுகாவல் பொறுப்பு யாருடையது?

(A) Farm Manager in charge of Pasture land
மேய்ச்சல் நில பண்ணை மேலாளர்

(B) Farm Manager incharge of Bulls
காளைகள் பண்ணை மேலாளர்

(C) Farm Manager incharge of gardens
தோட்டப் பண்ணை மேலாளர்

(D) Farm Manager incharge of Dairy
பால் உற்பத்திப் பண்ணை மேலாளர்

54. Who is in-charge for Detection of heat and service of cows in a farm?
பண்ணையிலுள்ள பசுக்களின் சினைப் பருவம் கண்டறிந்து கருவூட்டல் செய்யும் பொறுப்பு அலுவலர் யார்?

(A) Farm Manager in-charge of Dairy
பால் உற்பத்தி பிரிவு பண்ணை மேலாளர்

(B) Farm Manager in-charge of Bulls
காளைகள் பண்ணை மேலாளர்

(C) Farm Manager in-charge of Gardens
தோட்டப் பண்ணை மேலாளர்

(D) Farm Manager in-charge of Pasture land
மேய்ச்சல் நில பண்ணை மேலாளர்

55. Who is in-charge of Allocation of work Bullocks for the days work in farm?
பண்ணையிலுள்ள வண்டி மாடுகளுக்கு தினசரி பணி ஒதுக்கீடு செய்யும் அலுவலர் யார்?

(A) Farm Manager in charge of Bulls
காளைகள் பண்ணை மேலாளர்

(B) Farm Manager in charge of Gardens
தோட்டப் பண்ணை மேலாளர்

(C) Farm Manager in charge of Pasture land
மேய்ச்சல் நில பண்ணை மேலாளர்

(D) Farm Manager in charge of Dairy
பால் உற்பத்திப் பிரிவு பண்ணை மேலாளர்

56. Who is responsible for dipping of sheep and clipping of wool in a farm?
அரசு கால்நடைப் பண்ணைகளில் உள்ள செம்மறி ஆடுகளுக்கு மருந்து குளியல் மற்றும் கம்பளி உரோமங்களை வெட்டும் பணி எந்த அலுவலருக்கு உரியது?

(A) Farm Manager incharge of Sheep
செம்மறி ஆட்டு பிரிவு பண்ணை மேலாளர்

(B) Farm Manager incharge of Pasture land
மேய்ச்சல் நில பண்ணை மேலாளர்

(C) Farm Manager incharge of gardens
தோட்டப் பணி பண்ணை மேலாளர்

(D) Farm Manager incharge of Dairy
பால் உற்பத்திப் பிரிவு பண்ணை மேலாளர்

57. Who is responsible for periodical vaccination of birds against specific disease?
அரசு கால்நடைப் பண்ணைகளில் உள்ள கோழிகளுக்கு முக்கிய நோய் தடுப்பூசி பணி மேற்கொள்பவர் யார்?

(A) Farm Manager in charge of Poultry
கோழி பிரிவு பண்ணை மேலாளர்

(B) Farm Manager in charge of Dairying
பால் உற்பத்திப் பிரிவு பண்ணை மேலாளர்

(C) Farm Manager in charge of Gardens
தோட்டப் பணி பண்ணை மேலாளர்

(D) Farm Manager in charge of Sheep
செம்மறி ஆட்டு பிரிவு பண்ணை மேலாளர்

58. Who is incharge to attending to the supply of green fodder and silage to various sections as action?
அரசு கால்நடைப் பண்ணைகளில் உள்ள கால்நடை பிரிவுகளுக்கு பசுந்தீவனம் மற்றும் ஊறுகாய் புல் வழங்கும் பணிகளை மேற்கொள்பவர் யார்?

(A) Farm Manager incharge of garden
தோட்டப் பண்ணை மேலாளர்

(B) Farm Manager incharge of Pasture
மேய்ச்சல் நில பண்ணை மேலாளர்

(C) Farm Manager incharge of sheep
செம்மறி ஆட்டு பிரிவு பண்ணை மேலாளர்

(D) Farm Manager incharge of Dairying
பால் உற்பத்திப் பிரிவு பண்ணை மேலாளர்

59. Who is incharge of shieling and cleaning of farm load, repairs to farms boundary fencing?
அரசு கால்நடைப் பண்ணைகளில் உள்ள மேய்ச்சல் நிலங்களில் தற்காலிக கூடாரங்கள் அமைத்தல் சாலைகளை சுத்தம் செய்தல் பண்ணை எல்லை வேலிகளை செப்பனிடுதல் போன்ற பணிகளுக்கு பொறுப்பானவர் யார்?

(A) Farm Manager incharge of Pasture
மேய்ச்சல் நில பண்ணை மேலாளர்

(B) Farm Manager incharge of Garden
தோட்டப் பணி பண்ணை மேலாளர்

(C) Farm Manager incharge of Dairying
பால் உற்பத்திப் பிரிவு பண்ணை மேலாளர்

(D) Farm Manager incharge of sheep
செம்மறி ஆட்டு பிரிவு பண்ணை மேலாளர்

60. Who will assist the concerned staff in grazing, deticking deworming, spraying of the sheep maintained in the farm?
அரசு கால்நடைப் பண்ணைகளில் உள்ள செம்மறி ஆடுகளுக்கு மேய்ச்சல் மற்றும் உண்ணி நீக்குதல், மருந்து தெளித்தல் குடற்புழு நீக்கம் செய்தல் ஆகிய பணிகளுக்கு உதவி செய்யும் பணியாளர் யார்?

(A) Flock man
மந்தை காப்பாளர்

(B) Foreman
முதலாள்

(C) Counter
கவுண்டர்

(D) Fieldman
களப்பணியாளர்

61. Who is incharge of workshop steam boiler, pumping plants, chaff cutting machine weigh bridge tractor audit records?
கால்நடை பண்ணைகளில் உள்ள பணிமனையின் நீராவி கொதிகலன், தண்ணீர் மேலேற்றும் அறை, புல்வெட்டும் கருவி, எடை மேடை, டிராக்டர் தணிக்கை பதிவேடுகளுக்கு பொறுப்பான அலுவலர் யார்?

(A) Mechanic
மெக்கானிக்

(B) Fieldman
களப்பணியாளர்

(C) Maistries
மேஸ்திரி

(D) Foreman
முதலாள்

62. Who will assist the Manager in the discharge of their day today duties and attend the supervision of Labour and extract work from Mazdoors?
கால்நடைப் பண்ணைகளில் பணியாட்கள் மேற்பார்வை தினசரி வேலைகளை ஈடுபடுத்துதல் ஆகிய பணிகளில் பண்ணை மேலாளருக்கு உதவுபவர் யார்?

(A) Counters
எண்ணிக்கையாளர்

(B) Maistries
மேஸ்திரி

(C) Attender
உதவியாளர்

(D) Fieldman
களப்பணியாளர்

63. Who will assist the VAS incharge of wool analysis laboratories in the examination of wool samples?
கம்பளி உரோமம் ஆய்வுக்கூடத்தில் மாதிரிகளை ஆய்வு செய்ய கால்நடை உதவி மருத்துவருக்கு உதவி செய்யும் பணியாளர் யார்?

(A) Counters
எண்ணிக்கையாளர்

(B) Flockman
மந்தைகாப்பாளர்

(C) Mechanic
மெக்கானிக்

(D) Attenders
உதவியாளர்

64. Who is responsible for maintenance of stores and stock accounts and cattle feed indents?
அரசு கால்நடைப் பண்ணைகளில் கால்நடை தீவன பண்டசாலை மற்றும் அதன் இருப்பு விவரம் கால்நடை தீவன தேவை பட்டியல் தயாரிக்கும் பணிகளுக்கு பொறுப்பு அலுவலர் யார்?

(A) Storekeeper
பண்டக காப்பாளர்

(B) Farm Maistry (office)
பண்ணை மேஸ்திரி (அலுவலகம்)

(C) Clerk
எழுத்தர்

(D) Accountant
கணக்காளர்

65. Who is incharge for maintenance of library tools, disbursement of Causal wages, writing the names of Mazdoors in all musters of different section every month and attendance register of the staff?
பண்ணைகளில் உள்ள நூல் நிலைய புத்தகங்கள் தினக்கூலி பணியாளர்கள் ஊதியம் மாதம் தோறும் அனைத்து பிரிவு பணியாளர் வருகை பட்டியல் தயார் செய்தல் ஆகிய பணிகளுக்கு பொறுப்பான அலுவலர் யார்?

(A) Farm Maistry (Office)
பண்ணை மேஸ்திரி (அலுவலகம்)

(B) Office Manager
அலுவலக மேலாளர்

(C) Typist
தட்டச்சர்

(D) Clerk
எழுத்தர்

66. Who is responsible for Maintenance of cash, Cash Book, Temporary Advance Register, issue of Cash Receipts for all Cash received?
பணம், பணப் பதிவேடு, தற்காலிக முன்பண பதிவேடு பண ரசீது வழங்குதல் ஆகிய பணிகளுக்கு பொறுப்பான பணியாளர் யார்?

(A) Accountant
கணக்காளர்

(B) Office Manager
அலுவலக மேலாளர்

(C) Typist
தட்டச்சர்

(D) Clerk
எழுத்தர்

67. Who is responsible for Maintenance of Service Register leave Account – increment, periodical returns of establishment, Pensions Gratuity including farm mazdoors?
பணியாளர்களின் பணிப்பதிவேடு விடுப்பு கணக்குப் பதிவேடு ஊதிய உயர்வு பதிவேடு மாதாந்திர அறிக்கை ஓய்வூதியம் பணிக்கொடை ஆகிய பணிகளுக்கு பொறுப்பான பணியாளர் யார்?

(A) Office manager
அலுவலக மேலாளர்

(B) Accountant
கணக்காளர்

(C) Typist
தட்டச்சர்

(D) Clerk
எழுத்தர்

68. Service Rolls are also maintained for every individual mazdoors since they are eligible for gratuity at the end of their service on attaining the age of?
எந்த வயதில் பணி ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு பணி பதிவேடு பராமரிக்கப்பட்டு பணிக்கொடை வழங்கப்படுகிறது?

(A) 60 years
60 ஆண்டுகள்

(B) 59 years
59 ஆண்டுகள்

(C) 58 years
58 ஆண்டுகள்

(D) 56 years
56 ஆண்டுகள்

69. Who is in charge of the running of the steam boiler under the overall control of the foreman?
முதலாள் கட்டுப்பாட்டில் உள்ள எந்த பணியாளர் நீராவி கொதிகலன்களை இயக்குவதற்கு முழு பொறுப்பு ஆவார்?

(A) Mechanic
மெக்கானிக்

(B) Field man
களப்பணியாளர்

(C) Compounder
கம்பவுண்டர்

(D) Maistries
மேஸ்திரி

70. Who is the Controlling Officer of the Farm?
அரசு கால்நடைப் பண்ணையின் முழு கட்டுப்பாட்டு அலுவலர் யார்?

(A) Superintendent
கண்காணிப்பாளர்

(B) Farm Manager
பண்ணை மேலாளர்

(C) Office Manager
அலுவலக மேலாளர்

(D) Fodder development officer
தீவன அபிவிருத்தி அலுவலர்

71. What is the age of sheep and goat should be taken as for culling in government farms?
வெள்ளாடு, செம்மறி ஆடுகளை அரசு பண்ணைகளிலிருந்து கழிவு செய்யப்பட வேண்டிய வயது யாது?

(A) Above 5 years
5 ஆண்டுகளுக்கு மேல்

(B) Above 7 years
7 ஆண்டுகளுக்கு மேல்

(C) Above 8 years
8 ஆண்டுகளுக்கு மேல்

(D) Above 10 years
10 ஆண்டுகளுக்கு மேல்

72. How many times the culling may be done in all sheep farm?
செம்மறி ஆட்டு பண்ணைகளில் செம்மறி ஆடுகளை ஆண்டிற்கு எத்தனை முறை கழிவு செய்யலாம்?

(A) Twice a year
ஆண்டுக்கு இருமுறை

(B) Once a year
ஆண்டுக்கு ஒரு முறை

(C) Thrice a year
ஆண்டுக்கு மூன்று முறை

(D) None of the above
மேற்கண்ட எதுவுமில்லை

73. What is the criteria for culling laying pullets within first 90 days from the date of first laying?
முட்டையிடும் கண்ணி கோழிகளை முதல் 90 நாட்களுக்குள் எதன் அடிப்படையில் கழிவு செய்யலாம்?

(A) Less than 25 eggs
25 முட்டைகளுக்கு குறைவாக இடுதல்

(B) Less than 35 eggs
35 முட்டைகளுக்கு குறைவாக இடுதல்

(C) Less than 40 eggs
40 முட்டைகளுக்கு குறைவாக இடுதல்

(D) Less than 50 eggs
50 முட்டைகளுக்கு குறைவாக இடுதல்

74. What is the criteria for culling and laying hens during their first year of Production?
முட்டையிடும் கோழிகளை முதல் ஆண்டில் எதன் அடிப்படையில் கழிவு செய்யலாம்?

(A) Yielded less than 150 eggs
150 முட்டைகளுக்கு குறைவாக இடுதல்

(B) Yielded less than 160 eggs
160 முட்டைகளுக்கு குறைவாக இடுதல்

(C) Yielded less than 170 eggs
170 முட்டைகளுக்கு குறைவாக இடுதல்

(D) Yielded less than 180 eggs
180 முட்டைகளுக்கு குறைவாக இடுதல்

75. What is the name of the Register on the farm showing the crops raised, the manual treatment given, cultural practices adopted the yields obtained the total cost of production?
பயிரிட்ட விவரம், உரமிட்ட விபரம், தொழில்நுட்பங்கள் அறுவடை செய்யப்பட்ட விபரம் மற்றும் முழு உற்பத்தி விலை ஆகியவற்றை பதிவிடும் பதிவேட்டின் பெயர் என்ன?

(A) Field Register
வயல்வெளி பதிவேடு

(B) Garden Produce Register
தோட்ட உற்பத்தி பதிவேடு

(C) Stock Register of Manure
உரங்கள் இருப்பு பதிவேடு

(D) Service Register
பணிப்பதிவேடு

76. What is the name of the sheet give an idea of the labour required for different field operations the yield of crop the economics of cultivation and the suitability?
தேவையான வேலையாட்கள் களப்பணிகள் அறுவடை செய்த விபரம் உற்பத்தி பொருளாதாரம் போன்றவற்றை பதிவிடும் தாளின் பெயர் என்ன?

(A) Cultivation sheet
உற்பத்தி ஏடு

(B) Measurement books
அளவீட்டு புத்தகம்

(C) Sheet of Sanctioned works and completion works
இசைவளிக்கப்பட்ட வேலைகள் மற்றும் முடிக்கப்பட்ட வேலைகள் ஏடு

(D) Daily memorandum sheet
தினசரி குறிப்பு ஏடு

77. What is the sheet shows all the daily transaction of the farm and is the only record by which the Head Office is kept informed of what is going on in the Station under his control?
ஒரு பண்ணையின் தினசரி பரிவர்த்தனைகளை குறிப்பிடுவதும் அப்பண்ணையின் நிலைமையை தலைமை அலுவலகத்திற்கு தெரிவிக்கும் ஏட்டின் பெயர் என்ன?

(A) Daily Memorandum sheet
தினசரி குறிப்பு ஏடு

(B) Day book of sales
விற்பனை பற்றிய தினப்புத்தகம்

(C) Ledger for Credit Sales
கடன் விற்பனை பேரேடு

(D) Register of auction sales
ஏல விற்பனை பதிவேடு

78. Which of the following New Year's the celebration of "The More Milk Day" is celebrated?
எந்த புத்தாண்டை ஒட்டி "அதிக பால் தினம்" கொண்டாடப்படுகிறது?

(A) Tamil New Year Day
தமிழ் புத்தாண்டு தினம்

(B) Malayalam New Year Day
மலையாள புத்தாண்டு தினம்

(C) Telugu New Year Day
தெலுங்கு புத்தாண்டு தினம்

(D) English New Year Day
ஆங்கில புத்தாண்டு தினம்

79. Which of the following weeks falls during each year in all District in Madras State "The Gosamvardhana Day" celebrated?
ஆண்டுதோறும் "பசு பராமரிப்பு தினம்" எந்த மாதத்தில் வாரங்களில் சென்னை மாகாணத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்படுகிறது

(A) October and November
அக்டோபர் மற்றும் நவம்பர்

(B) November and December
நவம்பர் மற்றும் டிசம்பர்

(C) January and February
ஜனவரி மற்றும் பிப்ரவரி

(D) April and May
ஏப்ரல் மற்றும் மே

80. Who many attend the duties similar to the Farm Manager incharge of dairy?
பண்ணை மேலாளரை போன்று பணிப்பொறுப்புகள் கொண்ட பால் உற்பத்தி பிரிவு அலுவலர் யார்?

(A) Dairy Assistant
பால்வள உதவியாளர்

(B) Milk Recorder
பால் பதிவேட்டாளர்

(C) Maistri
மேஸ்திரி

(D) Attender
உதவியாளர்

81. Under what section the VAS will have power to seize and destroy the meat declared by them as unsuitable for Human Consumption with the owner's consent
மனிதர்கள் பயன்படுத்த தகுதியற்றது என அறிவிக்கப்பட்ட இறைச்சியை உரிமையாளரின் ஒப்புதலுடன் கைப்பற்றி அழிக்க கால்நடை உதவி மருத்துவர் அதிகாரம் அளிக்கும் சட்டப்பிரிவு எது?

(A) U/S 274 of Madras district Municipalities
பிரிவு 274 சென்னை மாவட்ட நகராட்சி சட்டம்

(B) U/S 275 of Madras district Municipalities
பிரிவு 275 சென்னை மாவட்ட நகராட்சி சட்டம்

(C) U/S 276 of Madras district Municipalities
பிரிவு 276 சென்னை மாவட்ட நகராட்சி சட்டம்

(D) U/S 277 of Madras district Municipalities
பிரிவு 277 சென்னை மாவட்ட நகராட்சி சட்டம்

82. Under what section the VAS will have the power to seize and destroyed where the owners consent is not for the coming
மனிதர்கள் பயன்படுத்த தகுதியற்றது என அறிவிக்கப்பட்ட இறைச்சியை உரிமையாளரின் ஒப்புதலின்றி கைப்பற்றி அழிக்க கால்நடை உதவி மருத்துவருக்கு அதிகாரம் அளிக்கும் சட்டப்பிரிவு எது?

(A) U/S 276 of Madras district Municipalities
பிரிவு 276 சென்னை மாவட்ட நகராட்சி சட்டம்

(B) U/S 280 of Madras district Municipalities
பிரிவு 280 சென்னை மாவட்ட நகராட்சி சட்டம்

(C) U/S 282 of Madras district Municipalities
பிரிவு 282 சென்னை மாவட்ட நகராட்சி சட்டம்

(D) U/S 284 of Madras district Municipalities
பிரிவு 284 சென்னை மாவட்ட நகராட்சி சட்டம்

83. What is Rule for culling a Murrah Buffaloes that are Poor milk producers?
எந்த அளவிற்கு கீழ் பால் உற்பத்தி செய்யும் முர்ரா இன எருமைகளை கழிவு செய்யலாம்?

(A) Below 2500 lb milk yield
2500 பவுண்டிற்கு கீழ் பால்கறவை

(B) Below 2400 lb milk yield
2400 பவுண்டிற்கு கீழ் பால்கறவை

(C) Below 2300 lb milk yield
2300 பவுண்டிற்கு கீழ் பால்கறவை

(D) Below 2700 lb milk yield
2700 பவுண்டிற்கு கீழ் பால்கறவை

84. What is the dose of Haemorrhagic Septicaemia vaccine if the cattle less than 600 lb body weight?
600 பவுண்டு உடல் எடை கொண்ட கால்நடைகளுக்கு போட வேண்டிய தொண்டை அடைப்பான் தடுப்பூசி அளவு யாது?

(A) 5 ml
5 மிலி

(B) 7 ml
7 மிலி

(C) 8 ml
8 மிலி

(D) 10 ml
10 மிலி

85. "D" disposals those that are to be destroyed after
"ப.மு" கோப்புகளை எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு அழிக்கலாம்?

(A) 10 years
10 ஆண்டுகள்

(B) 9 years
9 ஆண்டுகள்

(C) 8 years
8 ஆண்டுகள்

(D) 4 years
4 ஆண்டுகள்

86. What is the name of the Register for orders issued by an officer for the guidance of his office establishment in connection with the proper conduct of office work should be entered?
அலுவலகப் பணிகளை உரிய முறையில் நடத்திட கட்டுப்பாட்டு அலுவலரால் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட ஆணைகள் பதிவு செய்யப்பட வேண்டிய பதிவேட்டின் பெயர் என்ன?

(A) Office Order Book
அலுவலக ஆணை பதிவேடு

(B) Instructions Book
அறிவுரைகள் பதிவேடு

(C) Note Order Book
குறிப்பாணை பதிவேடு

(D) Office Procedure Register
அலுவலக நடைமுறை பதிவேடு

87. The requirements of Government for cloth like curtains, Towels, Table cloths, Uniform Bandage etc., should be met from
அரசு அலுவலகங்களுக்கு தேவைப்படும் திரைச்சீலைகள், துண்டுகள், மேசை விரிப்புகள், சீருடைகள் மற்றும் கட்டுத் துணிகள் எந்த நிறுவனத்திடம் இருந்து பெற வேண்டும்?

(A) Handloom cloth
கைத்தறி துணிகள்

(B) Powerloom cloth
விசைத்தறி துணிகள்

(C) Mill
மில் துணிகள்

(D) Khadi
கதர்

88. A post carrying a definite scale of pay sanctioned for a limited time
வரையறுக்கப்பட்ட ஊதிய விகிதம் கொண்டும் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் ஒப்புகை அளிக்கப்பட்ட பதவிகளின் பெயர் என்ன?

(A) Permanent Post
நிரந்தர பணியிடம்

(B) Temporary Post
தற்காலிக பணியிடம்

(C) Contract Post
ஒப்பந்த பணியிடம்

(D) Tenure Post
உரிமைக்கால பணியிடம்

89. A post carrying a definite rate of pay sanctioned without limit of time
வரையறுக்கப்பட்ட ஊதிய விகிதம் கொண்டும் கால வரையறையின்றி ஒப்புகை அளிக்கப்பட்ட பதவிகளின் பெயர் என்ன?

(A) Contact post
ஒப்பந்த பணியிடம்

(B) Permanent post
நிரந்தர பணியிடம்

(C) Temporary post
தற்காலிக பணியிடம்

(D) Tenure post
உரிமைக்கால பணியிடம்

90. A Permanent post which an individual government servant may not hold for more than a limited period
குறிப்பிட்ட பதவிக்காலம் மட்டுமே கொண்ட நிரந்தர பதவியின் பெயர் என்ன?

(A) Tenure post
உரிமைக்கால பணியிடம்

(B) Contract post
ஒப்பந்த பணியிடம்

(C) Permanent post
நிரந்தர பணியிடம்

(D) Temporary post
தற்காலிக பணியிடம்

91. An additional pay granted to a government servant to save him from a loss of substantine pay in respect of permanent post other than a tenure post due to revision of pay or to any reduction of such substantive pay otherwise than as a disciplinary measure
நிரந்தர பதவியில் நிலை பேறுள்ள பணிச் சம்பளத்திற்கு சம்பள சீராய்வு மூலமோ, ஒழுங்கு நடவடிக்கை தவிர வேறு வகையில் இழப்பு ஏற்பட்டால் அதனை ஈடுசெய்ய வழங்கப்படும் கூடுதல் ஊதியத்தின் பெயர் என்ன?

(A) Special pay
சிறப்பு ஊதியம்

(B) Personal pay
தனி ஊதியம்

(C) Substantive pay
நிலைபேறுள்ள ஊதியம்

(D) Technical pay
தொழில்நுட்ப ஊதியம்

92. An addition of the nature of pay to the emoluments of a post or of a government servant granted in consideration of the unhealthiness of the locality in which the work is performed
சுகாதாரமற்ற சூழ்நிலைகளில் பணிபுரியும் பணியிடங்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் கூடுதல் ஊதியத்தின் பெயர் என்ன?

(A) Special pay
சிறப்பு ஊதியம்

(B) Substantive pay
நிலைபேறுள்ள ஊதியம்

(C) Overseas pay
அயல்நாட்டு ஊதியம்

(D) Personal pay
தனி ஊதியம்

93. A monthly grant made to a government servant who is not in receipt of pay or leave salary
மாத ஊதியமோ, விடுப்பு ஊதியமோ பெறாத அரசு ஊழியருக்கு வழங்கப்படும் மாதாந்திர மான்யம் நல்கையின் பெயர் என்ன?

(A) Subsistance grant
வாழ்வாதார மான்யம்

(B) Special pay
சிறப்பு ஊதியம்

(C) Holiday pay
விடுமுறை கால ஊதியம்

(D) Technical pay
தொழில்நுட்ப ஊதியம்

94. What advance is intended to incur urgent unforseen expenditure which cannot be postponed until a bill is prepared and money is drawn from the Treasury?
கருவூலத்தில் உடனடியாக காசாக்க இயலாத, அவசர மற்றும் எதிர்பாராத செலவினங்களை ஈடுசெய்யும் வகையில் வழங்கப்படும் முன் பணத்தில் பெயர் என்ன?

(A) Permanent Advance
நிலையான முன்பணம்

(B) Festival Advance
பண்டிகை முன்பணம்

(C) Tour Advance
பயண முன்பணம்

(D) Transfer Advance
மாறுதல் முன்பணம்

95. Any process of introducing air or any substance into the female organ of a milch animal with the object of drawing off from the animal any secretion of milk
அதிக அளவில் பால் கறக்கும் நோக்கத்தில் பசுவின் பிறப்பு உறுப்பில் காற்றை செலுத்தும் முறையின் பெயர் என்ன?

(A) Phooka
பூக்கா

(B) Artificial insemination
செயற்கைமுறை கருவூட்டல்

(C) Uterine Bolus
யூடிரைன் போலஸ்

(D) Vaginal suppositary
வஜைனல் சப்போசிட்டரி

96. What means detention and segregation of Livestock newly landed from on board a ship for observation and testing or in order to keep such livestock apart from other livestock for the prescribed period?
வெளிநாடுகளில் இருந்து கப்பல மூலம் கொண்டு வரப்படும் கால்நடைகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தடுப்பு மற்றும் பிரித்து வைத்து ஆய்வு செய்தல் மற்றும் கண்காணிக்கும் முறைக்கு பெயர் என்ன?

(A) Quarantine
தொற்று தடைகாப்பு

(B) Isolation
தனிமைப்படுத்துதல்

(C) Intensive care
தீவிர சிகிச்சை

(D) Medical surveilance
மருத்துவ கண்காணிப்பு

97. How long the Livestock may be detained in quarantine?
தொற்று தடைகாப்பு மையங்களில் எத்தனை நாட்கள் கால்நடைகளை வைத்திருக்கலாம்?

(A) not exceeding 90 days
90 நாட்களுக்கு மிகாமல்

(B) not exceeding 100 days
100 நாட்களுக்கு மிகாமல்

(C) not exceeding 120 days
120 நாட்களுக்கு மிகாமல்

(D) not exceeding 110 days
110 நாட்களுக்கு மிகாமல்

98. How many days admitted / allowed for sale of unclaimed Livestock by Public auction in quarantine period if any livestock is not removed by the importer, owner or person in charge of after the issue of a notice?
தொற்று தடைக்காப்பு மையங்களில் வைக்கப்பட்டு கோரப்படாத கால்நடைகளை அதன் இறக்குமதியாளர், உரிமையாளர் அல்லது பொறுப்பாளருக்கு அறிவிப்பு செய்த எத்தனை நாட்களுக்குள் பொது ஏலம் மூலம் விற்பனை செய்யலாம்?

(A) within 7 days
7 நாட்களுக்குள்

(B) within 10 days
10 நாட்களுக்குள்

(C) within 12 days
12 நாட்களுக்குள்

(D) within 15 days
15 நாட்களுக்குள்

99. What means a recurring or non recurring payment granted to a government servant from general revenue as remuneration for special work of an occational character?
பொது வருவாயிலிருந்து ஒரு சிறப்பு பணிக்கோ அல்லது எப்போதாவது எழும் பணிக்கோ வழங்கும் தொடர் அல்லது தொடரா ஊதியத்தின் பெயர் என்ன?

(A) Honararium
மதிப்பூதியம்

(B) Contract pay
ஒப்பந்த ஊதியம்

(C) Personal pay
தனி ஊதியம்

(D) Special pay
சிறப்பு ஊதியம்

100. What means service in which a government servant received his substantive pay with the sanction of government from any other source other than the revenues of the Government of India or of a State?
மாநில/ஒன்றிய அரசின் வருவாய் இனங்கள் அல்லாமல் வேறு வருவாய் இனங்களில் இருந்து மாத ஊதியத்தை அரசின் முழு ஒப்புதலோடு பெறும் பணி காலத்திற்கு பெயர் என்ன?

(A) Foreign service
அயற்பணி

(B) Deputation
மாற்றுப்பணி

(C) Tenure post
பதவிக்காலப்பணி

(D) Lien
உரிமைப்பணி

---